## வேலணை பிரதேச சபை

## யாழ்ப்பாணம் மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூன் 29 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஆகஸ்ட் 30 ஆம் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து வேலணை பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதி நிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான கணக்கீட்டுக் கொள்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | விக்கிரம நாயக்கா கணக்கீட்டு கொள்கை, அட்டுறு நிலுவை, உள்ளூராட்சி சபைகளின் கணக்கீட்டு கொள்கை ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. | கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | ரூபா 885,000 ஆன வாராந்த சந்தை கட்டிடம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்காமையினால் காணி கட்டடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2020 இல் நிதிக்கூற்றுக்களில் சேர்த்துக்கொள்ளப்படும். | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 15 மயானங்களின் பெறுமதி கடந்த 1 - 6 ஆண்டுகளாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்காமையினால் காணி கட்டடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | பராதீனப்படுத்தியதும் சொத்துகளுக்கான பெறுமதிக்குள் சேர்க்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

**(இ) கணக்காய்வுச் சான்றின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 440,478 ஆன ஒரு நிலையான வைப்பிற்கான சான்றிதழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | அரசாங்க அதிபரால் சான்றிதழ் தங்களிடம் இல்லையென்று கூறப்பட்டுள்ளது. | சான்றுறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் | | | |
| | உப பிரிவு 16(2) | வருடாந்த செயலாற்ற அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு இறுதிக்கணக்கில் இணைக்கப்படும். | சட்டத்திற்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேசசபைகள் நிதி நிருவாக விதிகள் | | | |
| | அத்தியாயம் III இன் பிரிவு 32 | வீதவரி மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்படாததுடன் வீதவரி அறவீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை . | வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு சுற்று நிருபம் | | | |
| | 29 திசெம்பர் 2016 இன் 30/2016 ஆம் இலக்கம் | 10 வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விரைவில் பரீட்சிப்பு மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | | | |
| | (i) 2018.01.24 ஆம் திகதிய இல 05/2018 (1) ஐ கொண்ட சுற்றறிக்கை | பொதுமக்கள் சேவைப்பட்டயம் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | மாற்றியமைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | (ii) 2018.01.24 ஆம் திகதிய இலக்கம் 02/2018 | இயலளவு விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவது தொடர்பான மனிதவள திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் பணியாளர்களுக்கு ஓராண்டுக்கு ஆகக்குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி வழங்கப்பட்டமையினையும் உறுதிப்படுத்தப்பட முடியாதுள்ளது. | ஆளணிப்பற்றாக்குறையால் இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது தொடர்பான சிரேஸ்ட அலுவலரை நியமிக்க முடியவில்லை. | சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | ஏனைய சுற்றறிக்கை | | | |
| | 2018.07.19 ஆம் திகதிய 2018/e உள்@ராட்சி - 01 ஆம் இலக்க உள்@ராட்சி சுற்றுநிருபம் | பிரசைகளுக்கு இணையத்தின் மூலமாக சேவைகளை பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. | இணைய வசதிகள் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த சில காணிகள் விற்பனை மீது 1% விற்பனை வரி அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சோலைவரி நடவடிக்கைகள் பூரணமாக்கப்பட்ட பின் காணிகளின் விற்பனை வரி அறவிடப்படும். | சட்டத்திற்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,987,138 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,294,873 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலங்கள் | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,481,100 | 3,054,857 | - | 446,800 | 3,162,733 | - |
| வாடகைகள் | 1,362,900 | 1,483,880 | 220,150 | 1,557,000 | 1,772,281 | 23,250 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 567,600 | 959,735 | - | 420,300 | 726,906 | - |
| ஏனைய வருமானம் | 49,147,500 | 46,029,379 | 2,852,925 | 50,637,770 | 41,449,160 | 8,525,189 |
| | 53,559,100 | 51,527,851 | 3,073,075 | 53,061,870 | 47,111,080 | 8,548,439 |

#### 2.2.2 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடை வாடகை நிலுவை ரூபா 20,950 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | குத்தகை நிலுவை ரூபா 158,750 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடை வாடகைகளை முழுமையாக அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உபவிதியின் பிரகாரம், சபையினால் செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 30 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டு நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | உபவிதிக்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

#### (ஆ) செயற்பாடுகளின் செயலாற்றலில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 செயற்பாடுகளுக்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் குறிப்பிட்ட செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு வாரங்களில் வேலைகள் பூர்த்தியாக்கப்படும். | உரிய செயற்பாடுகள் முடிவுறுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

#### (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பில் மீளாய்வாண்டில் ரூபா 80,280 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் வருமானங்கள் எவையும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செலவினங்களை குறைக்கவும் வருமானங்களை அதிகரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கு அமையநடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் தயாரிக்கப்படாமையினால் முக்கிய பணிகள் நிறைவேற்றப்படாமல் இருந்தது. | அறிக்கைகள் தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன | அறிக்கைகள் உரிய காலத்திலும் சமர்ப்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பொதுமக்கள் சேவை பட்டயத்தினை காட்சிப்படுத்தியுள்ள போதும் மக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் காலம் தாழ்த்தியே வழங்கப்பட்டிருந்தது. | தாமதமின்றி சேவைகளை செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய காலத்தில் உரிய சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் 15 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | உரிய காலத்தில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தாமாகவே பதவி விலகிய அலுவலரிடமிருந்து அறவிட வேண்டிய இடர்கடன் ரூபா 35,295 அறவிட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஓய்வூதியம் கிடைக்கப் பெற்றதும் முழுமையாக அறவிடப்படும் | கடனை உரிய காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 உப அலுவலகங்களிற்குரிய 6183 ஆதனங்களிற்கு வீதவரி அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பிரதேசங்களை அடையாளப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வீதவரிகளை உரிய காலத்தில் அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 14 வாகனங்களின் உரிமையினை மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | வாகனங்களின் உரிமையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

#### 3.5.2 விளைவற்ற சொத்து

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உடற்பயிற்சி நிலையம் நடாத்துவதற்காக பல்வேறு இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ள போதும், அவை இரண்டு வருடங்களுக்கு மேலாக பாவனைக்குட்படுத்தப்படாதுள்ளது | இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

#### 3.5.3 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) ரக்ரர், பௌசர்கள் மற்றும் ரக்ரர் பெட்டிகள் சிதைவடைந்த நிலையிலும் இலக்கத்தகடுகள் பொருத்தப்படாத நிலையிலும் காணப்படுகின்றது. | இரண்டு ரக்ரர் பெட்டிகள் திருத்துவதற்கு திருத்தகத்தில் விடப்பட்டுள்ளது. சிதைவடைந்தவை அழிப்புச்சபையின் சிபார்சிற்கு கோரப்பட்டுள்ளது. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட படகுகள், இயந்திரங்கள், மிதவைகள் மற்றும் தொடர்பான உபகரணங்கள் பயன்படுத்தப்படாமலும் பராமரிப்பின்றியும் காணப்படுகின்றது. | சுற்றுலா மைய வேலைகள் பூரணப்படுத்தி கையளிக்கும் பட்சத்தில் குறிப்பிடப்பட்ட இயந்திரங்கள் பாவனைக்கு உட்படுத்தப்படும். | பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டு கணிப்பீட்டுச் சபை நடவடிக்கையின் போது 04 உப அலுவலகங்களில் 49 புத்தகங்கள் பார்வைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இழப்புக்கள் / நட்டங்களுக்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**3.6 பெறுகை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பெறுகைத்திட்டம் வழங்கல்கள் மற்றும் சேவைகள் செயற்பாடுகளுக்காக திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மூலதன வேலைகளுக்கான பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. | திட்டங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீண்டுவரும் செலவினங்களின் பாதீட்டு செலவினத்திற்கும் உண்மை செலவினத்திற்கும் இடையே வேறுபாடு காணப்படுவதால் இது செலவின பாதீட்டின் குறைபாடாக காணப்படுகின்றது. | குறைநிரப்பு வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு செலவுகள் மேற்கொள்ளப்பட்டன. | பாதீடு சரியான முறையில் தயாரிக்கப்படல் வேண்டும். |